
திருவள்ளுவர்

## திருக்குறள்

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.

அதிகாரம் - 380 - இறைமாட்சி

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# மார்ச் செய்திமடல்

( மாசி - பங்குனி )

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்

A just king, who guards over his subjects, Will be deemed God by them.

## பள்ளியின் அறிவிப்புகள் !!

1. தமிழ்ப்பள்ளியின் இரண்டாம் பருவத் தேர்வு வெற்றிகரமாக நிறைவுப்பெற்றது.
2. தமிழ்ப்பள்ளியின் புகைப்பட நாள் மார்ச் 07, 2025 இனிதே நடைபெற்றது. அன்று குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் பாரம்பரிய உடைகளை அணிந்து வந்தனர்.
3. தமிழ்ப்பள்ளியின் பொதுக்குழு கூட்டம் மே 3, 2025 நடைபெற உள்ளது. அனைத்து பெற்றோர்களும் கலந்துகொண்டு உங்கள் கருத்துகளை பகிருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
4. தமிழ்ப்பள்ளியின் ஆண்டு விழா போட்டிகள் மே 2 மற்றும் மே 3 நடைபெற உள்ளது* . குழந்தைகள் போட்டிகளில் பங்கேற்று தங்களின் திறமைகளை வெளிப்படுத்த, பெற்றோர்கள் பிள்ளைகளை ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்!

## பள்ளி அட்டவணை மார்ச் மாதம்

March 25

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

RITamilSchool Calendar

## வார்த்தை ஜாலம்!

1. ரம்துசங்க
2. ல்கிதகாகப்ப
3. ம்கும்த்புதறுன
4. றிள்கேக்விகு

## கதை படிப்போம் !

ஒரு நாள் மாலை ஒரு தாத்தா தன் பேரனுக்கு நீதிக்கதைகள் சொல்லிக் கொண்டிருந்தார். அதாவது, நம்மிடையே எப்பொழுதும் இரு விலங்கு போன்ற குணங்களுடன் சண்டை நடந்து கொண்டிருக்கிறது.



ஒன்று மிகவும் நல்ல பண்பு, பாசம் நேசம்,மனிதத்தன்மை, உண்மை போன்ற குணங்கள். மற்றொன்று கோபம், பொறாமை. பொய், தான் மட்டுமே எல்லாமும் எனப்படும் சகோ போன்ற குணங்கள் என்று கூறினார்.

அப்போ இதில் எந்த விலங்கு ஜெயிக்கும் என்று கேட்டான் சிறுவன். தாத்தா... நீ எதற்கு உணவு கொடுக்கிறாயோ அதுவே ஜெயிக்கும் என்றார். நாம் எப்போதும் நல்லவற்றையே நினைப்போம். செய்வோம் நல்லதே நடக்கும்.

## மாணவர்களின் கைவண்ணம் !



முன் மழலை மொட்டுக்களின் கை வண்ணம்



மனம் உங்களைக் கட்டுப்படுத்தும் முன் உங்கள் மனதைக் கட்டுப்படுத்துங்கள்

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# மார்ச் செய்திமடல்

( மாசி - பங்குனி )

Learn to control your mind before it controls you

## முத்தமிழ் முத்துக்கள்

### வில்லுப்பாட்டு








தமிழர் கலை வடிவங்களில் வில்லுப்பாட்டும் ஒன்றாகும். வில்லின் துணைக்கொண்டு பாடப்படும் பாட்டு என்பதால் வில்லுப்பாட்டு என பெயர் பெற்றது. வில்லுப்பாட்டில் முதன்மை கருவியாக வில்லையும், துணை கருவிகளாக உடுக்கை, குடம், தாளம், கட்டை போன்றவைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

வில்லுப்பாட்டின் தோற்றம் குறித்த காலத்தை வரையறுத்துக் கூற முடியவில்லை. மனிதன் வேட்டையாடுதலை தொழிலாகக் கொண்டிருந்த காலத்தில் அவனுக்கு உதவியது வில்லாகும். அதில் கட்டப்பட்டிருந்த மணியின் ஓசையில் மயங்கி அதன் படைப்பில் வில்லுப்பாட்டு இசை உருவாகி இருக்கலாம் என கருதப்படுகிறது.

## நினைவு நாளேடு

### ஹோலி:

பழங்காலத்திலிருந்த விவசாயப் பகுதிகளில் குளிர்கால இருளை அகற்றி வசந்தகால ஒளியை வரவேற்கும் வண்ணமயமான பண்டிகையாக ஹோலி கொண்டாடப்பட்டது. இப்பண்டிகை இந்து பாரம்பரியத்தில் வேரூன்றியிருந்தாலும் கூட, பண்டிகையின் முக்கிய கருப்பொருட்களில் ஒன்று ஒற்றுமை என்பதால், ஹோலி பண்டிகையை இந்தியா மட்டுமின்றி உலகிலுள்ள பல பகுதிகளில் கொண்டாடுகின்றனர்.


ஹோலி இருநாள் கொண்டாட்டமாகும். முதல்நாள் இரவு ஹோலி நெருப்பு ஏற்றி அதன்முன் நடனம் ஆடுவார்கள். மறுநாள் வெள்ளை நிற உடையணிந்து ஒருவருக்கொருவர் வண்ணப் பொடிகளையும், வண்ண நீர்களையும் வீசி, ஆடல், பாடல், உணவுகளுடன் ஹோலியை கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் பால்குனா (பங்குனி) மாதத்தில் வரும் பூர்ணிமா (பவுர்ணமி) அன்று ஹோலி கொண்டாடப்படுகிறது. 2025 ஆம் ஆண்டில், ஹோலி பண்டிகை மார்ச் 14 ஆம் தேதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட உள்ளது.

## மார்ச் மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :

- அபினவ் விஜய்குமார்
- கிரேசியா காபிரியேல்
- கேத்தரின் ஜெசிகா பிரவின் குமார்
- சஞ்ஜிவ் பா கண்ணன்
- சைலேஷ் பா கண்ணன்
- பிரணவ் கோவிந்த் தீபக்தரன்
- யுகன் சயீந்திரன்
- ஷ்ரவிக்னா விஜய்

மார்ச் மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடும் நம் பள்ளி செல்வங்களுக்கு, இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

## ஆசிரியர்கள் படைப்பு கண்டுபிடியுங்கள் !




செங்கேனி கவிதா
-மழலை ஆசிரியை

உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன:
கதைகள், கட்டுரைகள், வரைபடங்கள், விடுகதைகள், சிறு குறிப்புகள், குறுஞ்செய்திகள் போன்ற உங்கள் படைப்புகளை 15-ஆம் தேதிக்குள் NEWSLETTER.RITAMILSCHOOL@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இணையதளம்: HTTPS://WWW.RITAMILSCHOOL.ORG/
முகநூல்: HTTPS://WWW.FACEBOOK.COM/RITAMILSCHOOL